புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2052 பிப்ரவரி 18, 2021 புரட்சி 20 முழக்கம் 6 விலை: ரூ.3.00


## வந்து விட்டார் செந்தமிழ் காவலர்

ஆடிட்டர் குருமூர்த்தி, சசிகலாவை சாக்கடை என்றார். தி.மு.க. என்ற நெருப்பை அணைக்க ‘கங்கை ஜலத்துக்கு’ காத்திருக்க முடியாது; ‘ஆத்து வாசல்ல’ (வீடு என்பதற்கு அவாள் பயன்படுத்தும் மொழி) உள்ள சாக்கடைத் தண்ணீரையும் பயன்படுத்த வேண்டியதுதான் என்பது ‘அவாளின்’ கருத்து.

“ஆமாம். ஊழல் என்றாலே, ‘பிரம்மா’வின் நெற்றியில் பிறந்தவாளுக்கு சுத்தமாகப் பிடிக்காது; அவ்வளவு சுத்த சுயம்பிரகாச தங்கக் கட்டிகள்; அது சூத்திரர்களுக்கு மட்டும் தான்; ஜெயலலிதாவுக்கு பொருந்தாது! ஜெயலலிதாகூட ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்டு நான்காண்டு சிறை தண்டனை பெற்றவர் தான்; 100 கோடி அபராதம் வேறு; ஆனால், தி.மு.க. தான் ஊழல் கட்சி; ஜெயலலிதா புரட்சித் தலைவி” என்பார்கள்.

மோடி நேர்மையின் சின்னம் என்பார்கள். அவர், சென்னை அரசு விழாவில் மேடையில் வைக்கப்பட்டிருந்த ஜெயலலிதா படத்துக்கு ‘மலர்தூவி’ மரியாதை செலுத்திய காட்சியை தொலைக்காட்சிகளில் எல்லோரும் பார்த்தார்கள். அரசுப் பதவியை முறைகேடாகப் பயன்படுத்தி, சொத்துகளைக் குவித்திருக்கிறார் என்று உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் எழுதியே காட்டியிருக்கிறது. அதனால் என்ன? அதிகார அரசியலுக்காக எந்த நிலைக்கும் போவது ‘பாவ’மில்லை! ‘தர்மத்தைக் காக்க கொலை செய்; பரவாயில்லை’ என்று அர்ஜூனனுக்கு உபதேசம் செய்தவன் தானே பகவான் ‘கிருஷ்ணன்’.

இப்போதெல்லாம் தமிழ்மொழி மீது மோடிக்கு அவ்வளவு ‘பாசம்’ இப்போது பொங்கி வழிகிறது. அரசியலுக்காக ஜெயலலிதா படத்துக்கு பூ போடுவார் என்றால், ஓட்டுக்காக தமிழுக்கு ‘ஜே’ போடுவார். அவ்வையார், பாரதி, திருவள்ளுவரின் குறள் பற்றி எல்லாம் பேசுகிறார். படைப்புத் திறன் மிகுந்த அறிவாளிகளைக் கொண்டது தமிழ்நாடு என்கிறார். ஆனால், தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு துணைவேந்தர்களாக வேறு மாநிலத்துக்காரர்களை இறக்குமதி செய்வார். செம்மொழி சிறப்பு பெற்ற தமிழுக்கு நிதி ஒதுக்க மாட்டார். பேசுவதற்கே ஆளில்லாத சமஸ்கிருதத்துக்கு மட்டும் கோடியாக நிதி; தனிப் பல்கலைக் கழகங்கள்; பள்ளிகள் தோறும் சமஸ்கிருதப் பண்டிதர்களுக்கு கொழுத்த சம்பளத்தில் வேலை; அரசுத் திட்டங்களுக்கு சமஸ்கிருதத்தில் பெயர்; வேதத்தில் கூறப்படும் ‘சரசுவதி நதி’ பற்றி ஆராய்ச்சிக்கு நிதி ஒதுக்கீடு; இப்படி அரசுப் பணத்தை வாரி வீசுவார்!

மற்றொரு புறம் இந்தித் திணிப்பு; தமிழ்நாட்டின் ‘கேந்திர வித்யாலயா’வில் சமஸ்கிருதம், இந்திக்குத் தான் அங்கீகாரம்; சமஸ்கிருதம் படித்தால் தான் 6ஆம் வகுப்பில் தேர்ச்சி; தமிழாசிரியர்கள் நியமனங்களே கிடையாது; ஆனால், பா.ஜ.க. ஆட்சி தான் தமிழை வளர்க்கிறது என்கிறார் எச். ராஜா. விட்டால், ‘செந்தமிழ்ப் புலவர்’, ‘தமிழ்மொழிச் செம்மல்’ என்று மோடிக்கு பட்டம் சூட்டி விடுவார்கள்.

சரி; தமிழ் மீது ‘திடீர் காதல்’ வந்து விட்டது? ஆனால் தமிழர்கள் மீது மட்டும் தான் ‘கசப்பு’ வெறுப்பு. தமிழ்நாட்டின் மத்திய அரசு அலுவலகங்களில் பொதுத் துறை நிறுவனங்களில் இந்திக்காரர்கள் தான் குவிந்து கிடக்கிறார்கள். தமிழ்நாட்டுக் காரன் போனால், ‘இந்தி பேசத் தெரியுமா?’ என்று இந்தியிலேயே கேட்கும் நிலை வந்துவிடும் போலிருக்கிறது. இப்போது தமிழ்நாட்டில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி அதிகாரிகள் தமிழ்ப் பயிற்சித் திட்டம் ஒன்றை தொடங்கி இருக்கிறார்கள். தமிழ்நாட்டு பொதுத் துறை வங்கிகளில் வேலை செய்யும் 6000 இந்திக்காரர்களுக்கு தமிழ்ப் பேச பயிற்சி வகுப்புகளைத் தொடங்கியிருக்கிறார்கள். சென்னை பல்கலைக்கழகத்தோடு இதற்கு ஒப்பந்தம் போட்டுள்ளார்களாம்.

சுமார் ஒரு கோடி தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலை இல்லை. வடநாட்டுக்காரர்களை இங்கே வேலைகளில் குவித்து வைத்துக் கொண்டு அதற்கு வங்கி செலவிலேயே தமிழ் பயிற்சி வகுப்புகளை நடத்துகிறார்களாம். வாடிக்கையாளர்களிடம் அவர்கள் இனிமையான தமிழில் பேசப் போகிறார்களாம். அதாவது மோடியின் தமிழ்ப் ‘பற்று’ போல!

உ.பி.யிலோ, பீகாரிலோ, இராஜஸ்தானிலோ, ம.பி.யிலோ பல்லாயிரக்கணக்கில் தமிழர்கள் அங்கே அரசுப் பணிகளில் அமர்ந்து கொண்டு இந்திப் பயிற்சி பெற்று வடநாட்டுகாரர்களிடம் இந்தியில் ‘இனிமையாகப்’ பேச பயிற்சி தருவார்களா? அப்படி ஒரு நிலையை கற்பனைகூட செய்ய முடியுமா?

தமிழன் மட்டும் அவ்வளவு ஏமாளி! இளிச்சவாயன்!

அவ்வையாரையும் வள்ளுவரையும் பாரதியையும் பேசும் ‘தமிழ் ஜீ’க்களே!

ஊழல் எதிர்ப்பு ‘உத்தமர்’களே!

உங்கள் தமிழ்ப் பற்று ஊழல் எதிர்ப்புகளுக்கு உள்ளே பதுங்கி நிற்பது பார்ப்பனியம் – மனுதர்மம்!

சொரணையுள்ள தமிழன் இப்படித் தான் கேட்பான்!

– இரா

# ‘ஊபா’ சட்டத்தை இரத்து செய்: சென்னையில் ஆர்ப்பாட்டம்



தமிழ்த் தேச மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் பாலன், தோழர்கள் சீனிவாசன், செல்வராஜ் ஆகியோர் மீது போடப்பட்டுள்ள ஊபா (UAPA) சட்டத்தை திரும்பப் பெறக் கோரி கண்டன ஆர்ப்பாட்டம், சென்னை வள்ளுவர் கோட்டத்தில் 13.02.2021 அன்று காலை 10:30 மணியளவில் தொடங்கி நடைபெற்றது.

தமிழ்த்தேச மக்கள் முன்னணி சார்பில் ஒருங்கிணைக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில், திராவிடர் விடுதலைக் கழக பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் கலந்து கொண்டு, ஊபா சட்டத்தின் அடக்குமுறைகள் பற்றியும், “அரசியல் சக்திகளை முற்றும் முழுமையாக புறக்கணிக்காமல், அந்த அரசியல் சக்திகள் மக்களின் உணர்வுகளை பேசக்கூடியவர்களாக மாற்றி அந்த அரசியல் சக்திகளை கேடயங்களாக பயன்படுத்தி போராட வேண்டும். மேலும், இது போன்ற கூட்டியக்கத்தில் கலந்து கொண்டிருக்கும் அமைப்புகள் கூட்டியக்கத்தின் நோக்கங்களை பேச வேண்டுமே தவிர அந்த அமைப்புகளின் தத்துவங்களை பேசி இந்த ஒன்றிணைவின் நோக்கத்தை திசை திருப்பாமலும் செயல்பட வேண்டும். ஏனென்றால் தத்துவங்கள் வேறு வேறாக இருப்பதால் தான் நாம் தனித்தனியாக இருக்கிறோம்” என்று உரையாற்றினார்.

ஆர்ப்பாட்டத்தில் தலைமை நிலையச் செயலாளர் தபசிகுமரன், தலைமைக்குழு உறுப்பினர் அன்பு தனசேகர், சென்னை மாவட்டக் கழக செயலாளர் உமாபதி உட்பட சென்னை கழகத் தோழர்களும் கலந்து கொண்டனர்.

## அமெரிக்க நிறுவனம் அம்பலப்படுத்துகிறது: கணிப்பொறியில் மோசடி செய்து பொய் வழக்குகளைத் தயாரிக்கும் புலனாய்வு அமைப்பு

பீமா கோரேகானில் நடைபெற்ற போரில், மராத்திய பேஷ்வா படைகளை வெற்றி கொண்டதன் நூற்றாண்டை, மகாராஷ்டிர மாநிலத்திலுள்ள தலித்துக்கள் கடந்த 2018 ஜனவரி 1 அன்று விழாவாக கொண்டாடினர். ஆனால், இந்த விழாவிற்குள் புகுந்த சாதி ஆதிக்க வெறியர்கள், தலித் மக்கள் மீது கொடூர வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டனர். இதில் ஒருவர் பலியானார். பலர் காயமடைந்தனர்.

அன்றைய ஆளும் பாஜக அரசோ, சாதி வெறியர்களை கைது செய்யாமல், விழாவில் கலந்து கொண்ட ஆனந்த் டெல்டும்டே, கவுதம் நவ்லகா, கவிஞர் வரவர ராவ், ஸ்டான் சுவாமி, சுதா பரத்வாஜ், வெர்னோன் கன்சால்வஸ் உள்ளிட்ட தலித் தலைவர்கள், அறிவுஜீவிகள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்களைக் கைது செய்து சிறையில் அடைந்தது.இவர்களில் கேரளத்தைச் சேர்ந்த ரோனா வில்சனும் ஒருவராவார். தில்லியில் வசித்து வந்த இவர், ஜேஎன்யு பல்கலைக்கழகத்தில் எம்.பில் முடித்து, சர்ரே பல்கலைக்கழகம் அல்லது இங்கிலாந்தின் லீசெஸ்டர் பல்கலைக்கழகத்தில் பிஎச்டி ஆராய்ச்சிக்கான உதவித் தொகை எதிர்பார்த்து காத்திருந்தவர் ஆவார். இவரையும் பீமா கோரேகான் வழக்கில், ‘நகர்ப்புற நக்சலைட்டுக்கள்’ என்று குற்றச்சாட்டி மகாராஷ்டிர பாஜக அரசு கைது செய்தது.

அதாவது, வில்சன் ஒரு மாவோயிச போராளிக்கு கடிதம் எழுதியதாகவும், ஒரு சிக்கலான மாவோயிச சதித்திட்டத்தின் ஒரு பகுதியாக துப்பாக்கிகள் மற்றும் வெடிமருந்துகளின் தேவை பற்றி விவாதித்ததாகவும், தடைசெய்யப்பட்ட குழுவிடம் பிரதமர் நரேந்திர மோடியை படுகொலை செய்யும்படி வலியுறுத்தியதாகவும் காவல்துறை குற்றம்சாட்டியிருந்தது. இதற்கு ஆதாரமாக வில்சனின் கணினியில் இருந்து எடுக்கப்பட்ட இ-மெயில் கடிதங்களைத் தாக்கல் செய்தது.தேசிய புலனாய்வு முகமை இவ்வழக்கை தற்போது விசாரித்து வருகிறது.இந்நிலையில்தான், ரோனா வில்சனை கைது செய்வதற்காக புனே போலீசார் தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்தும் ஜோடிக்கப்பட்டவை என்பது ‘ஆர்சினல் கன்சல்டிங்’ (Arsenal Consulting) என்ற அமெரிக்க தடயவியல் ஆய்வு நிறுவனத்தின் மூலம் தெரியவந்துள்ளது.ரோனா வில்சனின் லேப்டாப்பில் இருந்த இ-மெயில் கடிதங்களை வைத்தே போலீசார் அவரைக் கைது செய்திருந்த நிலையில், அந்த கடிதங்கள் அனைத்தும் அவருக்குத் தெரியாமலேயே அவரது கணிப்பொறியில் தீய மென்பொருட்களைக் கொண்டு பதிவேற்றம் செய்யப்பட்டு இருப்பதை ‘ஆர்சனல் கன்சல்டிங்’ தனது சைபர்-தடயவியல் பரிசோதனையில் அம்பலப்படுத்தியுள்ளது.

கடிதங்களை பதிவேற்றுவதற்காக பயன்படுத்தப்பட்ட மைக்ரோசாப்ட் வேர்டின் புதிய பதிப்புக்கும் வில்சனின் கணினி மைக்ரோசாப்ட் மென்பொருளுக்கும் வேறுபாடுகள் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. கணினி-யில் வில்சனின் விசை அழுத்தங்கள், கடவுச்சொற்கள் மற்றும் உலாவல் செயல்பாடு பற்றிய பதிவுகளுக்கு இடையேயான வித்தியாசங்களையும் அமெரிக்க தடயவியல் ஆய்வு நிறுவனம் கண்டுபிடித்துள்ளது. அதுமட்டுமல்லாமல், அந்த 10 கடிதங்களும் ரோனா வில்சனால் ஒருமுறை கூட திறந்து பார்க்கப்படவில்லை என்றும், முதன்முறையாக அந்தக் கடிதங்களைத் திறந்து பார்த்ததே போலீசார்தான் என்றும் கண்டறிந்து கூறியுள்ளது.எல்லாவற்றுக்கும் மேலாக இந்த சைபர்-தாக்குதலை நடத்தியவர், வில்சனுக்கு மட்டும் குறிவைக்கவில்லை.

நான்கு வருட காலப்பகுதியில் பீமா கோரேகான் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட மற்ற நபர்களையும் குறிவைத்துள்ளார் என்பதற்கான சேவையகங்கள், ஐபி முகவரிகளும் கண்டறியப்பட்டுள்ளன. அறிவுஜீவிகள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் தொடர்புடைய பீமா கோரேகான் வழக்கின் பின்னால் அரங்கேற்றப்பட்டுள்ள சதி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஒட்டுமொத்த வழக்குமே ஜோடிக்கப்பட்டதுதான் என்று இடதுசாரிகள் - சமூக செயற்பாட்டாளர்கள் இதுநாள் வரை முன்வைத்துவரும் விமர்சனத்தை உண்மையாக்கியுள்ளது.இதனிடையே, ரோனா வில்சன் மீது போலி ஆதாரங்களைக் காரணம் காட்டி வழக்கு போடப்பட்டுள்ளதாக மும்பை உயர்நீதிமன்றத்தில் அவரது வழக்கறிஞர்கள் மேல்முறையீடு செய்துள்ளனர்.

**தலையங்கம்**

# ஆட்சியை விமர்சித்தால் தேச விரோதிகளா?

ஆட்சிக்கு எதிராக முன்வைக்கப்படும் விமர்சனங்களைக் கண்டு நடுங்குகிறது நடுவண் பா.ஜ.க. ஆட்சி. தங்களிடமுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி செயல்பாட்டாளர்கள், பத்திரிகையாளர்கள், முகநூல் பதிவாளர்களைக் கைது செய்யும் 'இட்லரிச' அடக்குமுறைகளைக் கொடூரமாகக் கட்டவிழ்த்து விடுகிறார்கள். இதற்காக தங்கள் கட்டுப்பாட்டிலுள்ள விசாரணை அமைப்புகளை முறைகேடாகப் பயன்படுத்துவதைப் பார்க்கிறோம். சட்டத்துக்கு உட்பட்டு செயல்பட வேண்டும் என்ற அறவுணர்வு இல்லாத நபர்களை ஆர்.எஸ்.எஸ். பின்புலம் கொண்டவர்களை உயர் பதவிகளில் அமர்த்தியிருக்கிறார்கள்.

மகாராஷ்டிரா மாநிலம் பீமாகோரேகானில் உள்ள தலித் மக்களின் நினைவிடத்துக்கு வீரவணக்கம் செலுத்தச் சென்ற தலித் மக்கள் மீது இந்துத்துவ வெறியர்கள் தாக்குதல் நடத்தினர். பீமாகோரேகான் பகுதியில் பேஷ்வா பார்ப்பனர் ஆட்சி நடந்த போது கொடூரமான ஜாதி அடக்குமுறைகளை சட்டமாக்கியிருந்தனர். அப்போது பிரிட்டிஷார் படையில் இணைந்து ஒடுக்கப்பட்ட தலித் மக்கள் 'பேஷ்வா' படையினருடன் போரிட்டு அவர்களை வீழ்த்தியதன் நினைவாக அங்கே நினைவுத் தூண் எழுப்பப்பட்டது. 2018 ஜனவரி முதல் நாள் அங்கே வீர வணக்கம் செலுத்த வந்தவர்கள் மீது இந்துத்துவ ஜாதி வெறியர்கள் நடத்திய தாக்குதல் அது. தாக்கியவர்களைக் கைது செய்யாமல் கலவரத்தைத் தூண்டி விட்டார்கள் என்ற குற்றம் சாட்டி, அந்த விழாவில் பங்கேற்றுப் பேசிய ஒரே காரணத்துக்காக இடதுசாரி சிந்தனையாளர்கள், மனித உரிமை செயல்பாட்டாளர்களான மூத்த குடி மக்களை கைது செய்து 3 ஆண்டுகளாக சிறையில் அடைத்துள்ளது, பா.ஜ.க. ஆட்சி. அவர்கள் மீது போடப்பட்டுள்ள 'சட்டவிரோத தடுப்பு நடவடிக்கை' என்ற 'உபா' (UAPA) சட்டம் பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் பிரிட்டிஷ் அதிகாரி மெக்காலேயால் கொண்டு வரப்பட்டு, இப்போது அந்த நாட்டிலேயே கைவிடப்பட்ட ஒரு சட்டம். 30 நாள் போலீஸ் காவலில் விசாரிக்கவும் 3 மாதம் வரை குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யாமலும் பிணை பெறும் உரிமையோ, 'நடுவர் குழு' (Board) விசாரணையோ இல்லாமலும் வழக்கு விசாரணை முடியும் வரை வெளியே விடாமல் தடுக்கும் ஆள் தூக்கி சட்டம் அது. 'இந்துத்துவா' என்ற 'வேத மனுவாத' பார்ப்பனியத்தைக் காப்பாற்ற அமுல்படுத்தப்படும் நவீன 'மனு சாஸ்திர' சட்டம். ஆனந்த் டெல் டும்பே (அம்பேத்கர் பேத்தியை திருமணம் செய்தவர்), கவுதம் நவ்லகா, வெர்னோன் கன்சால்வஸ், கவிஞர் வரவரராவ், ஸ்டேன் சுவாமி பாதிரியார் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். கடும் உடல் நோய்களுக்கு உள்ளாகியுள்ள வயது முதிர்ந்த சிந்தனையாளர்கள் சிறையில் வாடுகிறார்கள்.

அதுமட்டுமல்ல, 70 நாட்களுக்கு மேலாக டெல்லியில் போராடும் விவசாயிகளின் கோரிக்கைகளை ஆதரித்தாலே பா.ஜ.க. ஆட்சி 'தேச துரோகிகள்' என்று முத்திரை குத்துகிறது. பகுத்தறிவாளர்களும் இடதுசாரி சிந்தனையாளர்களும் மனித உரிமை செயல்பாட்டாளர்களுமான தபோல்கர், கல்புர்கி, கோவிந்த் பன்சாரே, கவுரி லங்கேஷ் ஆகியோரை சுட்டுக் கொன்ற கொலைகாரர்கள், சுதந்திரமாக நடமாடுகிறார்கள். இவர்கள் அனைவரும் 'சனாதன் சான்ஸ்தா' என்ற ஒரே பயங்கரவாத அமைப்பைச் சார்ந்தவர்கள் என்று சிறப்பு புலனாய்வுக் குழு உறுதி செய்த பிறகும் அந்த அமைப்பை 'தீவிரவாத' அமைப்பு என்றோ, 'தேசவிரோத' அமைப்பு என்றோ அறிவிக்கவோ தடை செய்யவோ 'தேசபக்தி' பா.ஜ.க. ஆட்சி தயாராக இல்லை.

ஜனவரி 26இல் விவசாயிகள் போராட்டத்தில் நடந்த கலவரத்தைத் தூண்டிவிட்டதாக 'இந்தியா டுடே' ராஜ்தீப் சர்தேசாய், நேஷனல் ஹெரால்ட், மூத்த ஆசிரியர் மிருளாள் பாண்டே, 'குவாமி ஆவாஸ்' ஆசிரியர் ஜாஃபர் சூகா, 'கேரவன்' ஆசிரியர் பரேஷ் நாத், அதே இதழின் ஆசிரியர் குழுவினரான வினோத் கே. ஜோஸ் ஆகிய பத்திரிகையாளர்கள், தேச துரோகம், வகுப்புவாத அமைதியின்மையை குலைத்தல், மத நம்பிக்கைகளை அவமதித்தல் என்ற கொடூர பிரிவுகளில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிந்தனையாளர்கள், பத்திரிகையாளர்களைத் தொடர்ந்து சமூக வலைதளங்கள் மீதும் நடுவண் ஆட்சியின் ஒடுக்குமுறைகள் பாயத் தொடங்கியிருக்கின்றன. சமூக ஊடகங்களின் 'சுதந்திரமான கருத்துரிமை வெளி' பார்ப்பனிய மனுதர்ம கூட்டத்துக்கு இப்போது பெரும் சவாலாகிவிட்டதால் ஆட்சிக்கு எதிரான கருத்துகளைப் பதிவிடுகிறவர்களை 'தேசத் துரோகிகள்' என்று முத்திரை குத்துகிறார்கள்.

விவசாயிகள் போராட்டத்தை ஆதரித்து, அமெரிக்காவைச் சார்ந்த உலகப் புகழ் பாப் பாடகி ரிஹானா, விவசாயிகளின் நியாயமான போராட்டம் பற்றி நாம் ஏன் பேசுவதில்லை என்ற ஒரே வரி 'டிவிட்டை' பதிவிட்டார். அவரை காலிஸ்தான் தீவிரவாத இயக்க ஆதரவாளர் என்ற முத்திரை குத்துகிறது "தேசபக்த' பா.ஜ.க. ஆட்சி! காரணம், அந்த ஒரு வரி டிவீட், விவசாயிகள் போராட்டத்தை உலகம் முழுதும் கொண்டு சேர்த்து விட்டதே என்ற அச்சமும் அவமானமும் தான். சுவீடன் நாட்டின் சுற்றுச்சூழல் செயல்பாட்டாளர் 18 வயதே நிரம்பிய இளம் பெண் செயல்பாட்டாளர் கிரேட்டா தன்பர்க், டெல்லி விவசாயிகளின் போராட்டத்தைக் கண்டு மனம் குமுறினார். போராட்ட செய்திகளை வெளி உலகத்துக்கு கொண்டு செல்ல, ஒரே தொகுப்பாக்கித் தரும் 'டூல் கிட்' ஒன்றை உருவாக்கினார். அந்த 'டூல் கிட்'டைப் பயன்படுத்தி பெங்களூரைச் சார்ந்த 21 வயதே நிரம்பிய திஷா ரவி என்ற மாணவி, விவசாயிகளின் போராட்ட செய்திகளை பதிவிட்டார் என்பதற்காக அவர் கைது செய்யப்பட்டு, டெல்லி உயர்நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு, 5 நாள் காவலில் வைக்கப்பட் டுள்ளார். இந்தியப் பார்ப்பன ஊடகங்களுக்கு இல்லாத 'அறமும் – நேர்மையும்' நாடு கடந்த மனித உரிமை சுற்றுச் சூழல் செயல்பாட்டாளர்களுக்கு இருக்கிறது. இதற்காக 'மனுவாத' கூட்டமும் அதன் ஊதுகுழலான ஊடகங்களும் வெட்கப்பட வேண்டும். 'சம்பூகன்' தலையையும் 'ஏகலைவன்' கட்டை விரலையும், 'நந்தனின்' தீக்குளிப்பையும் தங்கள் 'தர்மங்களைக்' காப்பாற்ற விலையாகக் கேட்டக் கூட்டமாயிற்றே!

சமூக வலைதளங்களில் செய்திப் பரிமாற்றங்களுக்கான 'உலகம் தழுவிய' செயலியாக செயல்படும் 'டிவிட்டரும்' இப்போது இவர்களின் கண்களை உறுத்துகிறது. ஆட்சிக்கு எதிராக கருத்து தெரிவிப்போரின் பதிவுகளை அனுமதித்தால் நடவடிக்கை எடுப்போம் என்று மிரட்டுகிறது நடுவண் ஆட்சி. அந்தப் பதிவுகளை நீக்கச் சொல்லி மிரட்டுகிறது. கோரிக்கையை ஏற்று 250 பதிவுகளை நீக்கியது 'டிவிட்டர்' நிறுவனம். இப்போது, 'அது போதாது; சமூக செயல்பாட்டாளர்கள், அரசியல் தலைவர்கள் பதிவிடும் கருத்துகளையும் ஆட்சிக்கு எதிராக இருந்தால் நீக்க வேண்டும், இல்லையேல் 'டிவிட்டர்' நிறுவனத்தின் மீது நடவடிக்கை எடுப்போம்' என்று மிரட்டுகிறது. 'இந்திய அரசியல் சட்டம் வழங்கியுள்ள கருத்துரிமைக்கு எதிரானது இந்த கோரிக்கை. இந்திய அரசியல் சட்டத்துக்கு எதிரான இந்த கோரிக்கையை ஏற்க முடியாது' என்று இந்தியாவுக்கே 'பாடம்' எடுக்கிறது 'டிவிட்டர்' நிறுவனம். இதைவிட இந்தியாவுக்கு அதன் 'தேச பக்தி' கூச்சலுக்கு வேறு அவமானமோ, தலைகுனிவோ இருக்க முடியுமா என்று கேட்கிறோம்.

தமிழ்நாட்டில் தமிழ்த் தேச மக்கள் முன்னணியைச் சார்ந்த தோழர்கள் பாலன், சீனிவாசன், செல்வராஜ் ஆகியோர் எந்த அடிப்படை காரணமும் இன்றி 'உபா' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் தேர்தல் களத்தில் பா.ஜ.க. ஆட்சியின் அடக்குமுறை மதவெறிக் கொள்கைகளை எதிர்த்து பரப்புரை செய்வதாக அந்த அமைப்பு ஒரு தீர்மானம் நிறைவேற்றியதால் அவர்கள் 'தேசத் துரோகி'களாகிவிட்டனர். இந்த வழக்குகளில் 'தேசிய புலனாய்வு நிறுவனம்' என்ற மத்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் நேரடி கட்டுப்பாட்டிலுள்ள அமைப்பு, வழக்குகளை மோசடியாக தயாரிக்கிறது என்ற அதிர்ச்சியான செய்திகளும் வெளிச்சத்துக்கு வந்துள்ளன. பீமாகொரேகான் வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள ரோனா வில்சன் என்ற ஆய்வாளரின், கணினியில் முறைகேடாக ஊடுருவி (ஹேக்), மோடியை கொலை செய்ய சதி செய்த குற்றச்சாட்டுக்கான போலி ஆவணங்களை 'என்.அய்.ஏ.' அமைப்பு திணித்திருக்கிறது. இந்த மோசடியை 'ஆர்சினல் கன்சல்ட்டிங்' (Arsenal consulting) என்ற அமெரிக்க தடயவியல் ஆய்வு நிறுவனம் ஆதாரத்துடன் அம்பலப்படுத்தியிருக்கிறது.

பா.ஜ.க.வின் 'இந்துத்துவ', 'மனுவாத' தேசபக்தி இப்படி சர்வதேசங்களிலும் அம்பலப்பட்டு நிற்கிறது.

"வேதத்தை மறுப்பவர்களை தேவர்களை எதிர்த்தவர்களை 'அழிப்பதே தர்மம்' அதுவே ராஜநீதி" என்ற கொள்கை அப்படியே மீண்டும் இப்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

"ஓ இந்திரனே! சோமனே! ராட்சதர்களை எரி! எரி! நசுக்கு! இருண்ட காடுகளில் ஒன்று, பத்து, நூறாய்ப் பெருகி வரும் அந்த 'அரக்க'க் கூட்டங்களை அடக்கு; சின்னாபின்னப்படுத்து! அக்கினிச் சுவாலையில் பொசுக்கு! சித்திரவதை செய்! துண்டு துண்டாக வெட்டு! – **(ரிக்வேதம் 8வது மண்டலம் 1004வது மந்திரம்)**

வேதங்கள் கூறும் அடக்குமுறைகள் அவர்களின் வாரிசுகளால் 'நவீன' வடிவமெடுத்து செயல்படுகின்றன. இந்தப் புரிதலோடு அடக்குமுறைக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

# நடுவண் ஆட்சியின் ஈவிரக்கமற்ற பெட்ரோல் – கேஸ் விலை உயர்வு

சிலிண்டர் 'கேஸ்' விலை 785 ஆகிவிட்டது. பா.ஜ.க.வின் பொருளாதாரப் புலிகள் இதை நியாயப்படுத்துகிறார்கள். இந்த ஒரு மாதத்தில் மட்டும் ரூ.75 உயர்ந்துள்ளது.

2014 மே மாதத்தில் டெல்லியில் பெட்ரோல் விலை ஒரு லிட்டர் அனைத்து வரிகளும் நீங்கலாக ரூ.47.12; இது பிப்ரவரி யில் 2021இல் வரிகள் நீங்கலாக ரூ.29.34 ஆக குறைந்தது. ஆனால், அடிப்படையான பெட்ரோல் விலை மீது நடுவண் ஆட்சி வரி, டூட்டி, கமிஷன், லெவி என்ற பெயர்களில் 217 சதவீத வரிகளைப் போட்டு குறைந்த விலைக்கு மக்களுக்குக் கிடைக்காமல் பார்த்துக் கொள்கிறது.


2021 பிப்ரவரியில் பெட்ரோலின் சர்வதேச சந்தை நிலவரப்படி ஒரு லிட்டர் பெட்ரோல் ரூ.29.34 காசுகள் மட்டுமே. இத்துடன் மத்திய அரசு போடும் வரி 32.98 (38 சதவீதம்), விற்பனையாளர் கமிஷன் ரூ.3.69 (4 சத வீதம்), விற்பனை வரி ரூ.19.92 (23 சதவீதம்), ஆக அனைத்தையும் சேர்த்து ரூ.86.3-க்கு விற்கப் படுகிறது. (அனைத்து வரிகள் கமிஷன் உட்பட 100 சதவீதம் விதிக்கப்படுகிறது) இப்போதைய விலை ரூ. 785.

'செஸ்' என்று ஒரு குறிப்பிட்ட நோக்கத்தை முன் வைத்து போடப்படும் வரியையும் பெட்ரோலுக்கு போடுகிறார்கள். இதில் வரும் வருவாயில் மாநில அரசுகளுக்கு பங்கு கிடையாது. இப்போது மத்திய அமைச்சர் நிர்மலா தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையில் பெட்ரோல், டீசல் மீது விவசாயக் கட்டமைப்பு வளர்ச்சி என்ற பெயரில் 'செஸ்' வரியை விதித்தார். இப்படி 'செஸ்' வரி விதிப்பு வழியாக கிடைக்கும் தொகை முழுவதும் மத்திய அரசின் சேமிப்பு நிதிக்கு மாற்றப்படும். இது நாட்டின் முக்கிய நலத் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும்.

இப்படி 'செஸ்' மூலம் கிடைத்த தொகை ரூ.1.25 இலட்சம் கோடி மத்திய அரசின் கையிருப்பில் உள்ளது. இந்தத் தொகையை பயன்படுத்திக்கூட பெட்ரோல் டீசல் விலையை குறைக்க முடியும். ஆனால் இந்தத் தொகையிலிருந்து ஒரு ரூபாயைக் கூட பெட்ரோல் எண்ணெய் வளர்ச்சித் திட்டங் களுக்கு அரசு பயன்படுத்தவில்லை என்று தணிக்கைக் குழு சுட்டிக் காட்டியுள்ளது. இப்போது விவசாய கட்டமைப்பு என்ற பெயரில் மற்றொரு 'செஸ்' வரியை மக்கள் மீது திணித்திருக்கிறார்கள்.

பெட்ரோல் – டீசலைப் பயன்படுத்துவோரும் கேஸ் சிலிண்டரைப் பயன்படுத்துவோரும் பெரும்பாலும் இவர்கள் பார்வையில் 'இந்து'க்கள். ஆனால், 'இந்து'க்களின் பொருளாதாரம் பற்றி கவலை இல்லை; 'இந்து' தர்மம் பேசும் ஜாதியும் பார்ப்பன தர்மங்களும் பற்றித் தான் அவர்களுக்கு கவலை!

## தேசாபிமானமும் தேசியமும்



தேசாபிமானம் என்பது ஒவ்வொரு தேச முதலாளியும் மற்ற தேச முதலாளிகளுடன் சண்டைப் போட்டுத் தங்கள் தங்கள் முதலைப் பெருக்கிக் கொள்ள, ஏழை மக்களை – பாமர மக்களைப் பலி கொடுப்பதற்காகக் கற்பித்துக் கொண்ட தந்திர வார்த்தையாகும்.

**குடிஅரசு** – 20.11.1932

பார்ப்பனர்கள் என்ன நோக்கத்துடன் தேசியம், தேசியம் என்று கூப்பாடு போடு கிறார்கள் என்பது பற்றிப் பல தடவைகளில் நாம் வெளியிட்டிருக் கிறோம். 'தேசியம்' என்ற சூழ்ச்சிகள் கண்டுபிடிக்கப்பட்டதற்குக் காரணமே பார்ப்பனீயமான சனாதன தர்மங்களைப் பலப்படுத்தவே ஒழிய வேறில்லை.

**குடிஅரசு** – 19.03.1933

## ‘பெரியாரும்–மார்க்சியமும்’ தலைப்பில் கொளத்தூர் மணி உரை (1)

# பெரியார் பேசிய நாத்திகம் சமூக மாற்றத்துக்கானது

*குமரி மாவட்டம் குழித்துறையில் ஜன.24, 2021 அன்று ‘பெரியாரும் மார்க்சியமும்’ என்ற தலைப்பில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிகழ்த்திய உரை இது.*

*எம்.சி.பி.அய்.(யு) என்ற மார்க்சிய கட்சி - தமிழ்நாட்டில் மார்க்சியர்கள் - பெரியாரியலை உள்வாங்கிக் கொள்ளவில்லை என்ற விமர்சன அறிக்கையை வைத்திருந்தது. அதைத் தொடர்ந்து இக்கட்சி வெளியிட்டுள்ள கொள்கை அறிக்கையில், “சாதி-மதப் பிரிவினை சக்திகள் வலிமை பெற்றிருக்கும் இக்காலக்கட்டத்தில் பெரியார், அம்பேத்கரின் தேவையை கட்சி பூரணமாக உணர்ந்துள்ளது” என்று இந்த அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது. அந்தப் பின்னணியில் இந்தக் கருத்தரங்கையும் ஏற்பாடு செய்தது குறிப்பிடத்தக்கது. நிகழ்வில் கொளத்தூர் மணி ஆற்றிய உரை.*

பெரியார் என்பது பெரியாரினுடைய நான்கு கொள்கைகள் தான்.. பெரியாருடைய முதன்மை கொள்கையாக அவர் வைத்திருந்தது ஜாதி ஒழிப்பு. ஜாதி ஒழிப்பைத் தொடர்ந்து, ஜாதீயத்திற்கு பாதுகாப்பாக ஜாதியத்தைத் தொடர்ந்தும் பேணு கிறதாக, அத்தன்மையில் இருக்கிற, பெண்ணடிமை ஒழிப்பு என்பது அடுத்ததாக அவர் வைத்துக் கொண்ட கொள்கை.. மூன்றாவதாக அவர் வரித்துக் கொண்ட கொள்கை, பொதுவுடமை கொள்கை தான். 1925இல் சுயமரியாதை இயக்கம், ஜாதி ஒழிப்பு, 1926இல் பெண்ணுரிமை, 1927 ஆம் ஆண்டிலிருந்து அவர் பொதுவுடமை கருத்துகளை பேசத் தொடங்கு கிறார். இறுதியில், 1938ஆம் ஆண்டு தான் தனித் தமிழ் நாடு என்கிற ஒரு கொள்கையை அவர் முன் வைக்கிறார். இந்த நான்கு கொள்கைகளை முன்னிறுத்தித் தான் அவருடைய காலம் முழுதும் அவர் செயலாற்றி வந்திருக்கிறார். ஆனாலும் நீங்கள் நினைக்கலாம், இதில் எங்கே கடவுள் மறுப்பைக் காணோமே என்று. இந்த கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு, செயல்படுத்துவதற்கு அவர் கையில் எடுத்துக் கொண்ட ஆயுதம்தான் கடவுள் மறுப்பு. அவர் இலக்கே கடவுளை ஒழித்து விட்டால் எல்லாம் முடிந்துவிடும் என்பது அல்ல.. ஆனால், எல்லாவற்றிற்கும் தடையாக இருக்கிற கடவுளைப் பற்றிய விமரிசனத்தை அவர் வைக்க வேண்டிய தேவை வந்தது. நாத்திகர்கள் என்று நாம் பார்த்தால், பல இடங்களில் நான் சொல்லி யிருக்கிறேன். இந்த நாட்டில் பெரும் கொடுமையாக, இன்று வரைக்கும் நாம் பேசிக்கொண்டிருக்கிற, இந்துத்துவா என்கிற விஷ வித்தைத் தூவிவிட்ட சாவர்க்கர் ஒரு நாத்திகர்தான். அந்த நாத்திகம் நமக்குத் தேவையில்லை. வெறும் அறிவியல் நாத்திகத்தையும் பெரியார் பேசவில்லை. சமூக மாற்றத்திற்கான நாத்திகத்தைத் தான் பெரியார் முன்வைத்தார். அவருடைய நாத்திக உரையை நாம் கேட்டிருப்போ மேயானால், அவர் சொல்லிய செய்திகளெல்லாம் இப்படித்தான் இருக்கும். அவர் ஓரிடத்தில் சொல்லு கிறார்.

**“மனிதனுக்கு மனிதன் தொடக்கூடாது; கண்ணில் படக்கூடாது; தெருவில் நடக்கக் கூடாது; கோயிலுக்குள் போகக்கூடாது; குளத் தில் தண்ணீர் எடுக்கக் கூடாது என்கின்றவை போன்ற கொள்கைகள் தாண்டவமாடும் ஒரு நாட்டை பூகம்பத்தால் அழிக்காமலோ, எரி மலையின் நெருப்புக் குழம்பால் எரிக்காமலோ; சமுத்திரத்தால் மூழ்கச் செய்யாமலோ, பூமிப் பிளவில் அமிழச் செய்யாமலோ விட்டிருப் பதைப் பார்த்த பிறகுங்கூட கடவுள் ஒருவர் இருக்கிறார் என்றும், அவர் சர்வ தயாபரர் என்றும் யாராவது சொல்ல வந்தால் அவர்களை என்னவென்று நினைப்பது என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்”** இது தான் கடவுள் நம்பிக்கை குறித்து அவர் வைத்த கேள்வி. இப்படிப்பட்ட கொடுமைகளை அவர் பார்த்துக் கொண்டிருப்பாரா என்று கேள்வி வைத்தார்.

இன்னொரு இடத்தில் சொல்லுவார். இந்த தீண்டாமைக் கொடுமைகளை, இன்றென்ன அவசரம் நாளை பார்த்துக் கொள்ளலாம் என்று ஒரு நாள் கூட ஒத்தி வைக்க என் மனம் ஒப்புக் கொள்ளுவதில்லை என்று சொல்லுவார். **“கடவுள் எங்கும் நிறைந்த சர்வசக்தி உள்ளவர் பட்சபாதம் அற்றவர் என்று சொல்லிக் கொண்டு கடவுள்தான் தீண்டாதவர்கள் என்ற கொடுமைக்கு உட்படும் மக்களுக்கு ஆதாரம் என்பது எவ்வளவு கேவல மானது அனேகமாக அவர் தான் இந்த தீண்டாமையை படைத்தவர் என்றும்**



- சாதியத்தை முதலாளித்துவத்தைப் பாதுகாக்கும் கட்சி என்பதாலேயே பெரியார் காங்கிரசிலிருந்து விலகினார்.
- ஜாதித் திமிர் - பணத் திமிர் அடிப்படையில் இரண்டு சுரண்டல்களையுமே பெரியார் எதிர்த்தார்.

**சொல்லப்படுகிறது அது உண்மையெனில் உண்மையில் அத்தகைய கடவுளை எப்படி யாவது ஒழித்து விட்டுத்தான் மறுவேலை பார்க்க வேண்டும் இந்த அநியாயமான சங்கதி அவருக்குத் தெரியாது என்றால் அதற்காக அவரை இன்னமும் சீக்கிரமாய் ஒழிக்க வேண்டும் அவரால் இத்தகைய அநீதியை விளக்கம் அல்லது அக்கிரமம் செய்பவர்களை அடக்கவும் முடியாது என்றால் அவருக்கு எந்த உலகத்திலும் இருக்க வேண்டிய வேலையே இல்லை ஒழிக்க வேண்டியது தான் நியாயம்.”** இந்த உரை 1929இல் சென்னை பச்சையப்பன் ஹாலில் நடைபெற்ற தீண்டாமை விலக்கு மாநாட்டில் ஆற்றப்பட்டதாகும்.

தீண்டாமைக் கொடுமைகளை ஒழிக்கவும் கடவுளுக்கு விருப்பம்தான், ஆனால் அவரால் முடியவில்லை என்றால், அந்த கடவுள் நமக்கு எதற்கு? இப்படித் தான் அவர் வாதங்களை வைத்திருக்கிறார். எனவே, அவருடைய இலட்சியத்தை நோக்கி செல்லுகிற பயணத்தில், கடவுள் மறுப்பு மிகத் தேவையானது, இது தான் எல்லா கொடுமை களுக்கும் ஆணிவேராக இருக்கிறது, என்பதால் கடவுள் மறுப்பைப் பேசவேண்டி இருந்திருக்கிறது.

எனக்குக் கொடுக்கப்பட்ட தலைப்பு, ‘மார்க்சியமும் பெரியாரும்’ என்பதாகும். இதை மூன்று வகையில் நான் சொல்லவேண்டும் என்று நினைக்கிறேன். ஒன்று, பெரியாரும் அவருடைய மார்க்சிய செயல்பாடுகளும், மார்க்சிய சிந்தனை களும், அவர் முன்வைப்புகளும். இன்னொன்று, பெரியாருக்கு இணக்கமான மார்க்சிய பார்வைகள். பெரியாரை விட்டு விலகிச் சென்றிருக்கிற மார்க்சியம். இந்த மூன்றையும்தான் நான் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன். முதலில் பெரியாரின் மார்க்சியம் என்று சொல்லுகிறபோது, பதிவாக நம்மிடம் இருப்பது பெரியார் நடத்திய ‘குடிஅரசு’ என்கிற ஏடு தான். அவர் அதை 1925ஆம் ஆண்டு மே மாதத்தில் தொடங்குகிறார். அதற்கு பின்னால் தான், அவரின் உரைகளெல்லாம் அதில் முழுமையாக நாம் பார்க்க முடிகிறது. ஒரு வேளை பிற ஏடுகளில் வந்திருக்கலாம். அவற்றைப் படிக்கிற வாய்ப்பு நமக்கு இல்லை. நம் கைக்கு கிடைப்பதில்லை. ஆனால் அவருடைய குடிஅரசு ஏடு எல்லாம் நம்மிடம் இருக்கிறது. எங்கள் முயற்சியில் நாங்களே கூட பதிப்பித்து இருக்கிறோம். 1925 முதல் 1938 வரைக்கும் பதிமூன்று ஆண்டுகளில் அவர் பேசியதும் எழுதியதும், ஒரு இருபத்தேழு தொகுதிகளாக நாங்கள் வெளியிட்டு இருக்கிறோம்.. அதற்குப் பின்னால் 1949 வரைக்கும் திராவிடர் கழகம் வெளியிட்டிருக்கிறது. அவற்றில் நான் படித்த சில செய்திகளை உங்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன்.

1925ஆம் ஆண்டு நவம்பர் இறுதியில்தான் பெரியார் காங்கிரசை விட்டு வெளியேறினார். இந்த காங்கிரஸ் கட்சி என்பது ஜாதியை பாதுகாக்கிற, முதலாளித்துவத்தை பாதுகாக்கிற அமைப்பாக இருக்கிறது என்பது அவர் கருத்தாக இருந்தது. அதை பின்னாலே பார்ப்போம். இராமநாதபுரம் ஜில்லா காங்கிரஸ் மாநாடு என்றொரு மாநாடு காரைக்குடி பள்ளத்தூரில் நடக்கிறது. மாநாட்டுக்குத் தலைவர் பெரியார். ஏனென்றால், பெரியார் அப்போது தமிழ் நாடு காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர். அவர் ஆறாண்டு காலம் காங்கிரசிலே பணியாற்றியிருக் கிறார். 1919ஆம் ஆண்டிலிருந்து காங்கிரஸ் கட்சிக்குள் வருகிறார். அதற்கு முன்னால், காங்கிரஸ் ஆதர வாளராக இருந்திருக்கிறார். 1907 ஆம் ஆண்டு சூரத் மாநாட்டுக்கே போயிருக்கிறார். ஆனால் காங்கிரஸ் உறுப்பினராக இருக்கவில்லை. ஜாலியன்வாலாபாக் படுகொலை நடந்த பின்னால், அமிர்தசரஸ் மாநாட்டுக்கு போனவர் படுகொலை நடந்த இடங்களை குண்டு துளைத்த சுவர்களையெல்லாம் பார்த்துவிட்டு வந்த பின்னால் காங்கிரசில் உறுப்பினராகிறார். இந்த காலகட்டத்திலும்கூட நாம் விலகி நிற்கக்கூடாது, நாமும் நம்மை இணைத்துக் கொண்டு, அந்த ஏகாதிபத்தியத்திற்கு எதிரான இயக்கத்தில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமென்று, காங்கிரஸ் கட்சி ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம் என்று தவறாக புரிந்து கொண்டு, அதில் போய் சேர்ந்து விடுகிறார். அதைக் கண்டுணர்வதற்கு ஆறாண்டுகள் ஆகிவிட்டன.

பெரியார் காங்கிரசில் சேர்ந்த ஆண்டுதான் மொழி வழியாக காங்கிரஸ் கமிட்டிகளைப் பிரிக்கிறார்கள். அரசாங்க நிர்வாகம் என்பது, சென்னை மாகாணம் பெரியதாக இருந்தாலும், கட்சி அமைப்பை மொழிவழியாக பிரிக்கிறார்கள். தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி, கேரள காங்கிரஸ் கமிட்டி, ஆந்திர காங்கிரஸ் கமிட்டி என்று அப்போதே பிரித்து விட்டார்கள். அப்பொழுது தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக பெரியார் வருகிறார். அவர் இருந்த எல்லா ஆண்டும், தலைவர் இல்லையென்றால் பொதுச்செயலாளராகத் தான் இருந்துவிட்டு, பொதுச்செயலாளராக இருந்த போது தான் அந்த அமைப்பை விட்டு வெளியேறுகிறார். அந்த காரைக்குடி மாநாட்டில் அவர் பேசுகிற போது ஒன்றைச் சொல்லுகிறார், காங்கிரசைப் பற்றி. ஏனென்றால் அவர் அதற்குப் பின்னர் சில மாதங்களில் அந்த அமைப்பை விட்டு வெளியே போய்விடுகிறார். அம்மாநாட்டுரையில் அவர் சொல்லுகிறார்.

**“உலகமே தொழிலாளர்களுடையது தான். காங்கிரஸ் தொழிலாளர்களுடையதாகத் தான் இருந்திருக்க வேண்டும். இவ்வளவு நாள் காங்கிரஸ் பணக்காரர்களுடையதாகவும், ஆங்கிலம் படித்தவர்களுடையதாகவும் இருந்து வந்திருக்கிறது. மகாத்மா சொல்லும் சுயராஜ் ஜியம், தொழிலாளிக்குத்தான் வேண்டுமே தவிர, ஆங்கிலம் படித்தவர்களுக்கும் பணக்காரர் களுக்கும் அல்ல.”** ஆனால் இந்த கட்சி தொழி லாளர்கள் கட்சியாக இல்லையே என்று ஆதங்கப்படு கிறார்.

பணக்காரன், படித்தவன் கட்சியாகத்தானே இது இருக்கிறது. தொழிலாளர்கள் யாரும் இந்த கட்சியில் இல்லையே. அவர்களை இணைத்துக் கொள்ளாத கட்சியாக அல்லவா நடக்கிறது. கட்சியினுடைய மாநாட்டில் கட்சியின் பொதுச் செயலாளர் பேசுகிறார். இதை மாற்றியே ஆகவேண்டும் என்பது அவர் பேசுகிறபோதே அவருக்கு இருந்த எண்ணம், அங்கு ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தவர் களுக்கு எதிரான பார்வையாகத் தான் இருக்கிறது. அடுத்து கூட, இன்னொரு இடத்தில், சட்ட மன்ற தேர்தல் வருகிறபோது சொல்லுகிறார். சட்டமன்ற தேர்தல் நடக்கும். நியமனமும் உண்டு அந்த காலகட்டத்தில், எம்.எல்.சி-யென்று சொல்லு வார்கள். நியமனம் என்பது, தொழிலாளர் தொகுதி, பட்டதாரிகள் தொகுதி என்றும் உண்டு. அப்பொழுது அவர் அறிக்கை விடுகிறார்.

சரி, தொழிலாளர்களுக்குத் தலைவராக இருக்கும் சில அரசியல் தலைவர்களுக்கு தொழிலாளர்களிடம் உண்மையான அன்பு இருக்குமேயானால், சென்னை, நாகை, கோவை முதலிய இடங்களிலாவது, தங்கள் கட்சிக்காக நிறுத்தப்படும் சட்டசபை ஸ்தாபனங் களுக்கு, தொழிலாளர்களிலேயே சில பிரதிநிதிகளை ஏன் நிறுத்தலாகாது, என்று கேள்வி வைக்கிறார்.

நீயே தொழிலாளர் தொகுதி என்று பெயர் வைத்துவிட்டு, அதற்கு தேர்ந்தெடுக்கப்பட வேண் டியது போய், ஒரு கட்சிக்காரனை நிறுத்துகிறாய், பெரிய பெரிய ஆட்களை நிறுத்துகிறாய், தொழி லாளரை கொண்டு போய் நிறுத்து, அவன் குரலை ஒலிப்பதற்கு தானே பிரதிநிதி வேண்டும். அந்த கேள்வியை வைக்கிறார். இப்படி தொடர்ச்சியாக சின்னச்சின்ன செய்திகளெல்லாம் சொல்லிக் கொண்டே வரலாம்.

(தொடரும்)

– புரட்சிப் பெரியார் முழக்கம் 18.02.2021

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# ஐ.ஐ.டி.யில் ஓராண்டில் மட்டும் ‘902’ இடஒதுக்கீடு இடங்கள் நிரப்பப்படவில்லை

ஐ.ஐ.டி முனைவர் பட்ட அனுமதிகளில் ஓ.பி.சி, எஸ்.சி., எஸ்.டி பிரிவினர்க்கான இட ஒதுக்கீட்டில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது . மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு. வெங்கடேசன் எழுப்பிய கேள்விக்கு மத்திய கல்வித் துறை அமைச்சர் ரமேஷ் பொக்ரியால் நிஷாங்க் அளித்த அதிர்ச்சியான பதிலில் உண்மைகள் வெளி வந்துள்ளன.

முனைவர் பட்டக் கல்வியில் அனுமதிக்கப் பட்டுள்ள பட்டியல் சாதி, பட்டியல் பழங்குடியினர், இதர பிற்பட்ட சமூகங்களைச் சேர்ந்த மாணவர் எண்ணிக்கை, அப்பிரிவுகளுக்குரிய இட ஒதுக்கீடுசதவீதங்களை விட மிகக் குறைவாக உள்ளது. இந்தியாவின் 23 ஐ.ஐ.டி களில் மொத்தம் 7186 மாணவர்கள் 2020 ஆம் ஆண்டில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். இதில் ஓ.பி.சி மாணவர்கள் 1635 பேர், 707 பேர் பட்டியல் சாதியினர், 321 பேர் பழங்குடியினர் என அப் பதிலில் தெரிவிக்கப் பட்டுள்ளது.பட்டியல் சாதியினர் 10 சதவீதத்திற்கு கீழ்பட்டியல் சாதி மாணவர்களின் சதவீதம் குறைந்தபட்சம் 15 சதவீதம் இருக்க வேண்டும். ஆனால் முனைவர் பட்ட அனுமதிகளில் பட்டியல் சாதி மாணவர்களின் சதவீதம் 9.83 மட்டுமே.15 சதவீதம் எனில் 1077 பட்டியல் சாதி மாணவர்கள் இடம் பெற்றிருக்க வேண்டும். ஆனால் 370 இடங்கள் குறைவாக இருக்கின்றன. 23 ஐ.ஐ.டி களில் கோவா, தன்பாத், ரூர்கி ஆகியமூன்றைத் தவிர மற்ற 20 ஐ.ஐ.டி.களிலும் அனுமதிக்கப்பட்ட இப்பிரிவு மாணவர் எண்ணிக்கை, உரிய இட ஒதுக்கீடு சதவீதத்தை விட குறைவாக இருக்கிறது. சென்னை ஐ.ஐ.டியிலும் 9.41 சதவீதம் மட்டுமே பட்டியல் சாதி மாணவருக்கு இடம் கிடைத்துள்ளது.

பழங்குடி மாணவர்கள் இட ஒதுக்கீட்டில் குறைந்தபட்சம் 7.5 சதவீத இடங்களைப் பெற வேண்டும். ஆனால் 2020 ல் 4.46 சதவீத பழங்குடி மாணவர்களே இடம் பெற்றுள்ளனர். ஐ.ஐ.டி மும்பை மற்றும் ரூர்கி தவிர மற்ற 21 ஐ.ஐ.டி களிலும் உரிய சதவீதம் அவர்களுக்கு கிடைக்கவில்லை. இதில் மேலும் அதிர்ச்சி அளிப்பது என்னவெனில் காந்தி நகர் ஐ.ஐ.டியில் 124 பேர் முனைவர் பட்டங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள நிலைமையில் ஒரு பழங்குடி மாணவர் கூட அதில் இல்லை. ரோபார் ஐ.ஐ.டியில் 186 மொத்த மாணவர் அனுமதியில் ஒரு பழங்குடி மாணவர் கூட இல்லை. திருப்பதி ஐ.ஐ.டி யில் 148 பேரில் ஒரு பழங்குடியினர் கூட இல்லை. பாலக்காடு ஐ.ஐ.டியிலும் 146 பேரில் ஒரு பழங்குடியினர் கூட இல்லை. பழங்குடியினருக்கான 15 சதவீதம் நிரப்பப்பட்டிருந்தால் குறைந்த பட்சம் 538 பேருக்கு கிடைத்திருக்கும். ஆனால் 217 பேர் குறைவாக உள்ளனர்.

இதர பிற்பட்டோர் 27 சதவீதம் என்ற அளவில் அனுமதி பெற்றிருக்க வேண்டும். ஆனால் தன்பாத், தார்வார், பாலக்காடு, திருப்பதி, வாரணாசி, இந்தூர், பாட்னா, ஹைதராபாத், புவனேஸ்வர் ஆகிய ஐ.ஐ.டிக்கள் தவிர மீதமுள்ள 14 ஐ.ஐ.டிகளில் உரிய சதவீதத்தில் இதர பிற்பட்ட மாணவர்கள் அனுமதி பெறவில்லை. 1940 மாணவர்கள் இடம் பெற வேண்டிய நிலையில் 315 பேர் குறைவாக உள்ளனர்.

ஒரு ஆண்டில் மட்டும் இழந்ததே மொத்தஇடங்களில் 13 சதவீதத்தை நெருங்குகிறது. ஓராண்டில் இவ்வளவை இழந்தால் கடந்த காலங்களில் எவ்வளவு பறிபோயிருக்கும்? மத்திய கல்வி அமைச்சகத்தால் அமைக்கப்பட்ட ராம் கோபால் ராவ் தலைமையிலான நிபுணர் குழு மாணவர் அனுமதிகளில் இட ஒதுக்கீடு முறையாககடைப்பிடிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. மக்களை ஏமாற்றுகிறார்கள். வேதனையானது. முனைவர் பட்டஅனுமதிகளுக்கான முன் பயிற்சிக்கு ஆய்வு உதவியாளர் என்ற கல்விப் பிரிவை அறிமுகம் செய்யலாம் என்றும், அதைப் படிப்பவர்களுக்கு முனைவர் பட்டக் கல்விக்கான அனுமதி தருவதற்கு எந்த உத்தரவாதமும் இருக்காது என்றும் பரிந்துரைத்திருந்தது. அந்த அறிக்கையை மத்திய அரசு முற்றிலுமாக நிராகரிப்பதாக அறிவிக்க வேண்டும். உயர் கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீடு அமலாவதை அரசு உறுதி செய்ய வேண்டும்” என்று சு. வெங்கடேசன் வற்புறுத்தியுள்ளார்.

## வினா விடை

- வெங்காயத்தை தி.மு.க.வினரும் பா.ஜ.க.வினரும் பதுக்கியதால் தான் விலை உயர்ந்துள்ளது. **– ‘தினமலர்’ செய்தி**

  அப்படியா! அப்ப பெட்ரோல் – டீசலையும் இவுங்கதான் எங்கோ பதுக்கியிருப்பாங்க போல! உடனே கண்டுபிடிக்கனும்.

- இராமன் கோயில் கட்ட இதுவரை 1511 கோடி நிதி வசூல். **– அறக்கட்டளைத் தகவல்**

  நிர்மலா சீத்தாராமனிடம் கேட்டிருக்கக் கூடாதா? உணவு மான்யங்களை நிறுத்திவிட்டு பட்ஜெட்டிலேயே நிதி ஒதுக்கியிருப்பாரே!

- இந்திய நீதிமன்றங்களில் நீதி கிடைப்பது இல்லை.. **– ஓய்வு பெற்ற நீதிபதி ரஞ்சன் கோகாய்**

  நீதி கிடைக்காவிட்டாலும் ஓய்வு பெற்ற பிறகு நீதிபதிகளுக்கு எம்.பி. பதவி கிடைக்கும்.

- சென்னையில் நடந்த திருப்பதி கோயில் விழாவில் காஞ்சி சங்கரச்சாரி, சேகர் ரெட்டி சிறப்பு விருந்தினர்கள். **– செய்தி**

  முன்னாள் கைதிகள் தான்; ஆனாலும் சிறைகளுக்குள்ளும் பக்தியை விட்டு விடாத ‘ஒழுக்கசீலர்கள்’.

- தனித்துப் போட்டியிட்டால் 234 தொகுதிகளும் தே.மு.தி.க. தான் வெற்றி பெறும். **– பிரேமலதா**

  அய்யய்யோ... அப்படி எல்லாம் செஞ்சிடாதீங்க. பாவம் தி.மு.க., அ.தி.மு.க. கட்சிகளுக்கும் ஒன்றிரண்டு வெற்றி பெற கருணை காட்டுங்கள்!

- ‘கோ பேக் மோடி’ என்று எதிர்ப்பவர்கள் தேச விரோதிகள். **– பா.ஜ.க. முருகன்**

  ஆமாம்! ஆமாம்! இதை டிவிட்டரில் பார்ப்பவர்களும் தேச விரோதிகள் என்று அறிவிச்சிடுங்க. அப்ப தான் தேச விரோதிகள் அடங்குவாங்க!

# மணப்பாறையில் கழகக் கூட்டம்: கொளத்தூர் மணி சிறப்புரை




மணப்பாறையில் திராவிடர் விடுதலைக் கழகம், பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு சார்பில் ‘திராவிடத்தை ஆதரிப்போம்’ விளக்கப் பொதுக்கூட்டம் 3.2.2021 அன்று மாலை 6 மணியளவில் மணப்பாறை தந்தை பெரியார் சிலை அருகில் பெரியார் பெருந்தொண்டர் டைலர் சேகர் நினைவு திடலில் நடைபெற்றது.

திராவிடர் விடுதலைக் கழகத்தின் ஒன்றிய அமைப்பாளர் வீ.தனபால் வரவேற்புரையாற்றினார். மணவை சீரா. ஆனந்தன் (ஒன்றிய பொருளாளர் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி), சந்துரு (வழக்கறிஞர் திராவிடர் விடுதலைக் கழகம், திருச்சி, மாதம்பட்டி), கார்த்திகேயன் (மணப்பாறை நகர அமைப்பாளர்), விஜயகுமார் (கடவூர் பகுதி பொறுப்பாளர், திராவிடர் விடுதலைக் கழகம்), விஜயா மோகன் (கடவூர் ஒன்றிய அமைப்பாளர்) ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். பகுத்தறிவு பாடல்களை பெரியார் பிஞ்சுகள் யாழிசை, யாழினி பாடினார்கள். ‘மந்திரமா? தந்திரமா?’ அறிவியல் விளக்க நிகழ்ச்சியை துரை தாமோதரன் (பெரம்பலூர் மாவட்ட செயலாளர், திவிக) நடத்தினார்.

பெரியார் பெருந்தொண்டர்கள் அய்யா திருமால், டெய்லர் சேகர் ஆகியோர் படங்களை கழகத் தலைவர் கொளத்தூர் மணி திறந்து வைத்து “திராவிடத்தை ஆதரிப்போம்” என்கிற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

பகுத்தறிவாளர் கழகத்தின் துரை. காசிநாதன் (தலைமைக் கழகப் பேச்சாளர்), வே மணிவண்ணன் (பேரவை, பசுலூன் பகுத்தறிவாளர் கழகம்), சி.எம்.எஸ். ரமேஷ் (திராவிட கழக நகர செயலாளர்), பாலமுருகன் (ஒன்றிய தலைவர்), அசோகன் (ஒன்றிய இளைஞரணி திக.), சிவகாமி (தமிழ்நாடு அறிவியல் மன்றம். திருப்பூர்), சங்கீதா (திருப்பூர் மாவட்ட அமைப்பாளர். திவிக), மனோகரன் (திருச்சி திவிக மாவட்ட அமைப்பாளர்), புதுக்கோட்டை மாவட்ட தோழர்கள், கார்த்திகேயன் (மாவட்ட அமைப்பாளர்), ஆத்தூர் மகேந்திரன் (திவிக), அய்யா கோவிந்தராஜ் (முன்னாள் வனத்துறை அதிகாரி திவிக), குமரபட்டி வாசு, சிகரன் தங்கை ஆர்த்தி, வெங்கட், திருப்பூர் விஜயகுமார், அம்ஜத்கான் (திவிக,மேட்டூர்), இந்தியன் யூனியன் முஸ்லிம்லீக் மகாராஜா, பக்ரூதீன்(நகரத் தலைவர், திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை), மக்கள் அதிகாரம் தோழர்கள், விசிக மதனகோபால் (மாவட்ட பொருளாளர்), சிபிஎம் சாஜகான் (சிபிஐ), ஆடு சக்திவேல் (வட்ட செயலாளர், பாலு புரட்சிகர இளைஞர் முன்னணி) ஆகியோர் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். தோழர்கள் ஊ. ராம சாமி (திமுக.ஒன்றிய செயலாளர்), ஏ.பி சரவணன் (திமுக மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் மணப்பாறை) ஆகியோர் பொதுக்கூட்ட நிகழ்ச்சி ஏற்பாடுகளை செய் திருந்தனர். நடுபட்டி தினேஷ் நன்றி கூறினார்.

## குமாரபாளையத்தில் பெரியாரிய – இடதுசாரி அமைப்பினர் இணைந்து நடத்திய மணவிழா

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் வட்டம் குமாரபாளையம் கம்பன் நகரில் 05.02.2021 அன்று காலை 11 மணியளவில் திராவிடர் விடுதலைக் கழக நகரத் தலைவர் மீ.த.தண்டபாணி தலைமையில் தலித்குமார் வரவேற்புரை நிகழ்த்த, மு. கேப்டன் அண்ணாதுரை, வழக்கறிஞர் கார்த்திகேயன், ஏ. தேவி, எழில்சேரன், பி.ஏ., பி.எல்., பி.லிட்., வழக்குரைஞர் முன்னிலை வகிக்க வாழ்த்துரையாக மு.சாமிநாதன், ஈரோடு மேற்கு மாவட்ட செயலாளர் வேணுகோபால், அன்பழகன் (இலக்கியத் தளம்), பொன் கதிரவன், மார்க்சிய கம்யூனிஸ்ட் (மார்க்சிய-லெனினிஸ்ட்) வாழ்த்துரை வழங்கினர். நிறைவாக மணமக்கள் சரண்யா, பி.ஏ., ச. நந்தக்குமார், பி.ஏ., ஆகியோருக்கு உறுதிமொழி கூறி நகரத் தலைவர் வாழ்க்கை இணையேற்பு விழாவை நடத்தி வைத்தார். குருவை வேல்முருகன், முருகாண்டி, வடிவேல் மற்றும் குமாரபாளையம் கழகத் தோழர்களும், கழகக் குடும்பங்களும், மாவட்டச் செயலாளர் மு.சரவணன், முத்துப்பாண்டி மற்றும் தோழர்களும் கலந்து கொண்டனர். இணையேற்பு விழாவில் அனைவருக்கும் தேநீர் விருந்து வழங்கப்பட்டது. தேவி-மாதேஸ்வரன் நன்றி கூற நிகழ்வு நிறைவடைந்தது.

‘புரட்சிப் பெரியார் முழக்க’த்திற்கு ரூ. 1000 நன்கொடை வழங்கினார்கள். மாதேஸ்வரனின் இளைய சகோதரியின் மகன் தான் மணமகன் நந்தகுமார்.

2020 கொரோனா காலம் மே மாதத்தில் மாவட்டத் தலைவர் மு.சாமிநாதன் உறுதி மொழி கூறி நடந்த மணமக்கள் பெயர் சொல்ல விரும்பாத வாழ்க்கை இணையேற்பு விழாவில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மூத்த வழக்கறிஞர் பவானி ப.பா.மோகன், கார்த்திகேயன், மலைவாழ் மக்கள் அமைப்பைச் சார்ந்த வி.பி. குணசேகரன் வாழ்த்துரை வழங்கினார்கள். இந்த நிகழ்வு முன்னிட்டு ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்திற்கு ரூ.500 நன்கொடையாக வழங்கினார்கள் மணமக்கள்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 19th February 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN